தேவஸ்தான வெளியீடு — 29

உ

# அபிராமி அந்தாதி

## மூலமும் பொழிப்புரையும்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான
வெளியீடு



உ
294.5
அபிரா

PUBLIC LIBRARY, JAFFNA
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
25-03-1992

உ
தேவி துணை



# அபிராமி அந்தாதி

## மூலமும் பொழிப்புரையும்

சகல வகையான புத்தகங்களுக்கும்
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
119-1/1, கே. கே. எஸ் வீதி
யாழ்ப்பாணம்.
போன்; 24234.

வெளியீடு :
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
தெல்லிப்பழை
**1990**

85741C.C

முதற் பதிப்பு : 1983
இரண்டாம் பதிப்பு : 1985
மூன்றும் பதிப்பு (பொழிப்புரையுடன்) : 1987
நான்காம் பதிப்பு ,, : 1990

294.5

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்

PUBLIC LIBRARY
JAFFNA

உ

தேவி துணை

# பதிப்புரை

எங்கும் நிறைந்த இன்ப பொருளாகிய இறைவன் எல்லா உயிர்க ளிடத்தும் பேரிரக்கம் உள்ளவன். அவன்து இரக்கமே அருள் என்பது. இறைவன் அருளேயே பெண்மை உருவாகவும் தாய்மைத் தன்மையாகவுங் கொண்டு பண்டைக் காலந்தொட்டு வழிபட்டுவருகிறோம். தாய்மைப் பண்பே அம்மையின் திருவுரு. அவள் ஆற்றலை வியந்து அகங் கரைந்து அன்புடன் வழிபாடாற்றினால் தனமும், கல்வியும், தளர்வறியா மனமும், தெய்வ வடிவும், நெஞ்சில் வஞ்சமில்லா இனமும், மற்றும் நல்லன எல்லா மும் பெற்று இன்புற்று வாழலாம்; நமது வழிபாட்டுக்குரிய வழிவகைகளை வகுத்துத் தருவது தெய்வத் திருவருள் கைவந்த செந்தமிழ்ச் சான்றோர் பாடிப்பரவியருளிய தெய்வப் பனுவல்களே. ''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறைமொழிகள்'' இவையாகும். இத்தகைய திருப் பாடல்களை ஓதுதலே வழிபாட்டின் உயிராகும். தெய்வப் பனுவலாம் அபிராமி அந்தாதியை நித்திய பாராயணம்செய்து துர்க்காம்பிகை அபி ராமியின் அருளால் திருவும் கல்வியும் திருத்தமுறப் பெற்று இன்புற்று வாழவேண்டும் என்பதே எமது தேவஸ்தானத்தின் நோக்கமாகும். தெல் லிப்பழை துர்க்காதேவி தன்னேரில்லாத் தனிப்பெருங் கருணையை அகில உலகுக்கும் வழங்கிக்கொண்டிருக்கிறாள். இவ்வற்புதத்தைத் தமிழுலகம் நன்கு அறியும். ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பால் இருந்தும் கடிதங்கள் வந்து குவிகின்றன. அவர்கள் கேட்டுநிற்பது அம்பாளின் அருட்பாடல் களும் திருவுருவப்படமும் விபூதி குங்குமமும் அனுப்பிவைக்கவேண்டும் என்ற ஒரேயொரு கோரிக்கைதான். இதே வேண்டுதலை உள்நாட்டு

அன்பர்களும் மனமுருகி எம்மிடம் கேட்கின்றனர். இதனாலேயே காலத்துக்குக்காலம் அருள் நூல்களையும், தோத்திரப் பாமாலைகளையும் தேவஸ்தான வெளியீடாக வெளியிடுகிறோம். அபிராமி அந்தாதி மூலம் நூறு பாடல்களும் கொண்ட தொகுதி தேவஸ்தானத்தால் 12 - 02 - 83 இலும், 20–01–85இலும் வெளியிடப்பட்டது. சென்ற பதிப்பில் பாடல்களின் பொழிப்புரையையும் சேர்த்து வெளியிட்டால் படிப்பவர் பலருக்கும் பயனளிக்கும் என்ற ஆலோசனையின்பேரில் அவ்வாறு வெளியிடும் புண்ணியம் வாய்த்துள்ளது. உரையாசிரியர் மட்டுவில் ம. க. வேற்பிள்ளை அவர்களின் உரை விளக்கத்தையொட்டி இப்பொழிப்புரை எழுதப்பட்டது. இதனை, கட்டுவனூர் திரு. க. நாகலிங்கம், திருமதி. தர்மபூபதி சிதம்பரநாதன் ஆகியோர் பிரதிபண்ணி உதவினர். ஏழாலையூர் பண்டிதர் திரு. மு. கந்தையா அவர்களும், எமது தேவஸ்தானத்தைச் சேர்ந்த திரு. கா. சிவபாலன் அவர்களும் அச்சுப்பிழைகள் முதலியவற்றைத் திருத்தி உதவினர். மேலும் இம்முறை சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தினர் இந்நூலை அழகிய முறையில் அச்சிட்டு உதவினர். மேலே கூறப்பட்ட அனைவருக்கும் துர்க்கா தேவியின் திருவருளும் எமது தேவஸ்தானத்தாரின் நன்றியும் ஒருசேரக் கிடைப்பதாக என்று பிரார்த்திக்கின்றேன்.

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.**
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

தெல்லிப்பழை.
16 – 7 – 90.

உ

# அபிராமிபட்டர்
## வரலாற்றுச் சுருக்கம்

"சோழவள நாடு சோறுடைத்து" என்பார்கள். மண்வளமும் மனவளமும் நிறைந்த மக்களைக்கொண்ட இந்நாட்டிலே திருக்கடவூர் என்பது சிறந்த ஒரு திருத்தலம். சிதம்பரம் செல்பவர்கள் திருக்கடவூருக்கும் சென்று தரிசனம் செய்வது வழக்கம். அட்டவீரட்டத் தலங்களில் இதுவும் ஒன்று. அமிர்தகடேஸ்வரர் என்ற திருநாமத்தைக் கொண்ட பெருமான் காலனைக் காலால் உதைத்த திருக்கோலத்தில் இங்கு காட்சி தருகிறார். அபிராமி அம்பாளுக்கு இங்கு தனிக்கோயில் உண்டு. இவ்வாலயத்தில் அல்லும் பகலும் வழிபட்டுப் பூசை செய்தவர் அமிர்தலிங்கர் என்னும் நாமத்தைக் கொண்ட அபிராமிபட்டர். இவர் அம்பாளிடத்தில் நிறைந்த பக்தியுடையவர். பரவசமான நிலையில் அம்பாளைப் பூசித்து அருள் பெற்று வந்த இவருக்குத் தஞ்சை மன்னனின் அரண்மனையில் ஓர் உத்தியோகம் கிடைத்தது. சரபோஜி மன்னன் ஆட்சி செய்த இற்றைக்கு முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்நிகழ்ச்சி நடைபெற்றது. பஞ்சாங்கம் பார்க்கும் பணியில் பணிக்கப்பட்ட பட்டருடைய அயலவர்கள் சிறிது பொறாமை கொண்டனர். அரசவையில் இவருக்கு இருக்கும் கௌரவத்தைக் குறைக்க வேண்டுமென்று கங்கணங்கட்டினர்.

ஒரு நாள் தை அமாவாசை தினம்; மன்னன் திருக்கடவூர் வழிபாட்டுக்கு வந்தான். பட்டர் பூசை முடித்து நிட்டையிலிருந்த நேரம். பொறாமைக் கும்பல் கூடிநின்று 'பட்டரின் நிலைமை பைத்தியமானது' என்று மன்னருக்குச் செய்தி எட்டக்கூடியதாகத் தகவல் கொடுத்திருந்தனர். என்றாலும் மன்னன் வழிபாட்டுக்கு வந்த நேரத்தில் பட்டரை அழைத்தான். "இன்று அமாவாசை எத்தனை நாழிகை வரை உண்டு?" என்று வினவினான். அம்பிகையின் அருள்வெள்ளத்தில் மூழ்கியிருந்த பட்டர் சட்டென்று பதில் கொடுத்தார். "இன்று முழுப் பூரணையாயிற்றே" என்பதுதான் அவர் பதில்.

மன்னனுக்குப் பெருந்திகைப்பு; அத்துடன் "பஞ்சாங்கம் பார்க்கும் கடமையிலிருந்தவர் இத்தகைய மாறான கணிப்பை வைத்திருக்கிறாரே" என்பதனை நினைத்துப் பெருஞ்சினம் மூண்டது. சட்டென்று அவ்விடத்தை விட்டு அகன்று விட்டான் மன்னன். சிறிது நேரத்தால் பட்டர் தியானத்திலிருந்து எழுந்து நடந்தவற்றைக் கேட்டறிந்து ஒருகணம் பெருங் கவலையுற்றவர் மறுகணமே தெளிவடைந்தார். உள்ளத்தில் அம்பிகை ஒளிமயமாக எழுந்தருளிய நேரத்தில் அமாவாசை என்ற பேச்சுக்கு இடமில்லைத்தானே ;

என்றாலும் ஏதோ தவறு நேர்ந்துவிட்டது உண்மைதான் என்பதை மனதிற் கொண்டு பாடியதுதான் அபிராமி அந்தாதி.

வைராக்கிய உள்ளத்தோடு அம்பிகையின் திருமுன்றிலில் அக்கினிக் கிடங்கும் மேலே உறியும் நூறு கயிறும் இணையக்கூடியதாக இடமமைத்து உறியிலிருந்து அந்தாதி பாடினார். ஒவ்வொரு பாடலின் முடிவில் ஒவ்வொரு கயிறும் அறுக்கப்பட்டது. கீழே அக்கினிச்சுவாலை; ஆனால் அம்பிகை, சூரியன் அஸ்தமனமாகுமுன் காட்சி தந்து தன்வாக்கை மெய்ப்பிப்பாள் என்ற நம்பிக்கை.

எழுபத்தொன்பதாவது பாடல் முடியும் நேரம்; சூரியன் மறையும் வேளை; சோதி சொரூபமாக அபிராமி அம்பிகையின் காட்சி வெளிப்பட்டுத் திருத்தோடு வீசியெறியப்பட்டு வானத்தில் பூரண சந்திர உதயத்தைக் காட்டி நிற்கிறது. எங்கும் பரவசம்; எல்லார்க்கும் அதிசயம்; பட்டருக்குப் பராபரையின் அருள்வெள்ளம் அணைத்தது போல் ஆனந்தம்; தொடர்ந்து பாடி அந்தாதியை முடிக்கின்றார். மன்னனும் மற்றையோரும் செய்தி அறிந்து பட்டரை வணங்கிப் பாராட்டுகின்றனர். "அபிராமி, அபிராமி" என்று துதிக்கின்றனர்.

இதுதான் அபிராமி அந்தாதி என்ற தோத்திர நூல் சைவஉலகுக்குக் கிடைத்த கதை. நூறு பாடல்களைக்கொண்ட இந்நூலைப் பயின்று பாடல்களை ஓதி அபிராமிபட்டரை வணங்கி உய்வடைவது எமது தலையாய கடனாகும்.

உ

கணபதி துணை

ஸ்ரீ துர்க்காதேவி துணை

# அபிராமி அந்தாதி
# மூலமும் பொழிப்புரையும்

காப்பு

தாரமர் கொன்றையுஞ் சண்பக மாலையுஞ் சாத்துந்தில்லை
யூரர்தம் பாகத் துமைமைந்த னேயுல கேழும்பெற்ற
சீரபி ராமியந் தாதியெப் போதுமென் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே நிற்கக் கட்டுரையே.

பொழிப்புரை:- கொன்றை மலர் மாலையையுஞ் சண்பக மலர் மாலையையும் தரித்தருளும் தில்லை நடராசப்பெருமானுடைய இடப் பாகத்தின்கண்ணே வீற்றிருக்கும் சிவகாமசுந்தரி அம்மையாருடைய திருக்குமாரரே! கணபதியே! அபிராமி அம்பாள்மீது பாடப்படும் அந்தாதியின் பொருளானது என் மனத்தினுள்ளே இடையறாது நிலை பெறுவதற்கு அருள் பாலிப்பீராக.

நூல்

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே.

பொழிப்புரை:- உதயசூரியனும், மஞ்சாடி மலரும், இரத்தின நூலுணர்வு பெற்றோரால் மதிக்கப்படும் மாணிக்கமணியும்; மாதுளம்பூவும், மின்னற் கொடியும், குங்குமக் குழம்பும்போலச் செந்நிறமேனியுடையவரும் மகாலட்சுமியும் வணங்குகின்ற சிறப்புடையவருமாகிய அபிராமிதேவியே, எனது மேலான துணையாகும். 1

துணையும் தொழுந் தெய்வமும் பெற்றதாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையும் மென்பாசாங் குசமும்கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவ தறிந்தனமே.

பொழிப்புரை:- புஷ்பபாணங்களும் கரும்புவில்லும் பாசாங்குசமும் திருக்கரங்களில் தரித்திருக்கும் திரிபுரசுந்தரி, எம் துணையும் நாம் வணங்கும் தெய்வமும் பெற்ற தாயும் வேதங்களின் முதல் நடு ஈறும் ஆகி நிற்பதை அறிந்துகொண்டோம். 2

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்து கொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே திருவே வெருவிப்
பிறிந்தேன் நின்னன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக் குறவாய மனிதரையே.

**பொழிப்புரை:-** *திருவாகிய அபிராமிதேவியே! உன் திருவடிக்கே புகலடைந்த நான் வேதரகசியத்தை அறிந்துகொண்டதால் பாவவினையாற்றி நரகப் பாதையை நோக்கிச் செல்லும் உன் அன்பரல்லாதாரை வெறுத்து ஒதுக்கித் திருவருள்வழி நின்று வாழும் பேறு பெற்றுக்கொண்டேன்.* 3

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடைமேல்
பனிதரு திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும் என்புந்தி எந்நாளும் பொருந்துகவே.

**பொழிப்புரை:-** *மனிதரும் தேவரும் மயக்கமில்லாத முனிவர்களும் சன்னிதியில் வந்து தலைவணங்கும் சிவந்த திருவடிகளையுடைய இளமை நலம் வாய்ந்த அபிராமிதேவியே! கொன்றையணிந்த திருச்சடைமீது குளிர் வெண் இளமதியையும் பாம்பையும் கங்கையையும் தாங்கியருளிய சிவபெருமானும் தேவரீரும் என் மனதில் தியானப் பொருளாக என்றும் எழுந்தருளியிருப்பீராக.* 4

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே.

**பொழிப்புரை:-** *மூவகை உடலிலும் கலந்திருக்கின்ற மறைப்புச் சக்தியும், செம்புபோன்ற பர அபரஞான முலைகளால் வருந்தும் கொடியிடையையுடைய மனோன்மணியும் சிவபெருமானுண்டருளிய நஞ்சை அமுதாக்கிய உமையும். ஞான வடிவினளுமாகிய அபிராமிதேவியினது செந்தாமரைப் பூவிலும் மேலான திருவடி தமியேன் சிரசில் இடம்பெற்றுள்ளது.* 5

சென்னியது உன்பொற் திருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின் அடியாருடன் கூடி முறைமுறையே
பன்னியது என்றும் உன்தன் பரமாகம பத்ததியே.



**பொழிப்புரை:-** *செம்மேனியையுடைய அபிராமிதேவியே! உன் பொன் போன்ற திருவடி என் சிரசில் முடிமாலையாகத் தங்கியுள்ளது. உன் மூலமந்திரம் என் உள்ளத்தில் தியானப் பொருளாக நிலைபெற்றுள்ளது. தேவி உன் மேலாகிய சக்தி ஆகமபத்ததி நின் அடியாரோடு கூடிப் பல முறை படித்துணரப்பட்டது.* 6

ததியுறு மத்தில் சுழலும்என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருது கண்டாய் கமலாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கி என்றும்
துதியுறு சேவடியாய் சிந்துர ஆனன சுந்தரியே.

**பொழிப்புரை:-** *செந்தாமரையைக் கோவிலாகக் கொண்ட பிரமாவும் இளமதியைச் சடையிற் தரித்த சிவபெருமானும் திருமாலும் என்றும் துதிக்கும் சிவந்த திருவடிகளை உடையவரே! செம்பொட்டு அணிந்த திரு முகத்தை உடைய அபிராமிதேவியே! மத்தினால் கடையப்படுகின்ற தயிர் சுழல்வது போல் பிறப்பு இறப்புக்களால் உழலுகின்ற எனதுயிர் தளராது சிவ கதியை அடையும் வண்ணம் திருவுளம் கொள்வீராக.* 7

சுந்தரி எந்தை துணைவி என்பாசத் தொடரைஎல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே.

**பொழிப்புரை:-** *பாசத்தளைகளை எல்லாம் அழிக்கின்ற செந்நிறத்தை உடையவரும் மகிடாசுரனைக் கொன்று அருளியவரும் நீல நிறத்தையுடையவரும் நித்திய கன்னிகையும் பிரமகபாலத்தைத் திருக்கரத்தில் தாங்கியவரும் எந்தை பிரானின் சக்தியுமாகிய அபிராமிதேவியினது திருவடித்தாமரை மலர்கள் தமியேனது தியானத்தில் சதாகாலமும் உள்ளன.* 8

கருத்தன எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பில்
பெருத்தன பால்அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத் தனபாரமும் ஆரமும் செங்கைச் சிலையும்அம்பும்
முருத்தன மூரலும் நீயும் அம்மே வந்து என்முன் நிற்கவே.

**பொழிப்புரை:-** *சிவபெருமானின் கண்ணில் ஒளிர்வனவும், பொன்மலையாகிய மேருவைப்போல் பருத்தனவும், சீகாழி ஞானக்குழந்தைக்குப் பால் கொடுத்தனவுமாகிய பேரருள் புரியும் இரு திருத்தனபாரங்களும், அவற்றில் தங்கிய முத்துமாலையும், செங்கரத்தில் தாங்கிய கரும்புவில்லும், புஷ்ப*

பாணங்களும், வெள்ளொளி வீசும் நகையுமாக உலகமாதாவே! நீவிர் எழுந்தருளி வந்து அடியேனுக்குக் காட்சியளிப்பீராக. 9

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பது உன்னை
என்றும் வணங்குவது உன் மலர்த்தாள் எழுதா மறையின்
ஒன்றும் அரும்பொருளே அருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியா முத்தி ஆனந்தமே.

பொழிப்புரை:- வேதாந்தப் பொருளாய் அறிதற்கு அரியவரே! சிவசக்தி ஆனவரே! உமாதேவியே! பார்வதியாகப் பிறந்தருளியவரே! பிறவா நெறி அளிக்கும் பேரானந்த மயமான அபிராமிதேவியே! நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் அடியேன் தியானிப்பது தேவரீரையே, என்றும் வணங்குவதும் உன் திருவடிமலர்களையேயாம். 10

ஆனந்தமாய் என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்தமான வடிவுடையாள் மறை நான்கினுக்கும்
தானந்தமான சரணார விந்தம் தவளநிறக்
கானந்தம் ஆடரங்காம் எம்பிரான் முடிக் கண்ணியதே.

பொழிப்புரை:- தமியேனுக்குப் பேரானந்தமாகியும், பேரறிவாகியும், உள்ளம் நிறைந்த அமுதமாகியும், நான்மறைகளுக்கும் தானே முடிவாயிருக்கின்ற திருவடித்தாமரைமலர், திருவெண்காடு நடனசாலையாம் திருக்கடவூரில் எழுந்தருளியிருக்கும் அமிர்தகடேசுவரரின் முடிமாலையில் உள்ளது. 11

கண்ணியது உன்புகழ் கற்பது உன்நாமம் கசிந்து பத்தி
பண்ணியது உன் இரு பாதாம்புயத்தில் பகல் இரவா(க)
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான் முன்செய்த
புண்ணியம் ஏது என்அம்மே புவி ஏழையும் பூத்தவளே.

பொழிப்புரை:- ஏழு உலகங்களையும் பெற்றெடுத்த அபிராமி தேவியே! அடியேன் சிந்திப்பது வீட்டின்பம் தரும் உன் திருப்புகழையே. படிப்பது உன் திருநாமங்களையே! மனமுருகி அன்பு செய்தது நின் திருவடிகளையே. பகலிரவாய் நட்புறவு பூண்டது நின் அடியார் சங்கத்தையே. இதற்கு அடியேன் பூர்வஜென்மத்தில் செய்த சிவபுண்ணியம் ஏதோ தாயே! 12

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைக் கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னையன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே.



பொழிப்புரை:- பதினான்கு புவனங்களையும் பெறாது பெற்றவளே! அவைகளைக் காக்கின்றவளே! மீள ஒடுக்குகின்றவளே! சதாசிவனுக்கு மூத்தவளே! திருமாலுக்கு இளையவராக இருப்பவளே! பெருந்தவத்துக் குரியவளே! உன்னையன்றி மற்றோர் தெய்வத்தை வழிபடுவதா! 13

வந்திப்பவர் உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப்பவர் நற் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர் பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண்ணளியே.

பொழிப்புரை:- எம்பிராட்டியே! தேவரீரைத் திரிகரணசுத்தியால் வழிபடுபவர் தேவரும் அசுரருமாகிய இருதிறத்தாருமாவர். நின்னை அருவடிவாய் மனத்தினுல் தியானிப்பவர் பிரமாவும் விஷ்ணுவுமே, தூய மெய்யறிவுக் கயிற்றால் மனத்தறியில் பிணிப்பவர் அழிவில் சிவானந்தப்பேறுடைய சிவயோகிகளே. எனினும் ஆலயங்களில் தேவரீரைக் கண்டு வணங்கும் நம்மவர்களுக்குத் திருவருளைப் பெறுதல் மிகவும் எளிதாம். 14

தண்ணளிக்கு என்று முன்னே பலகோடி தவங்கள் செய்தார்
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார் மதி வானவர்தம்
விண்ணளிக்கும் செல்வமும் அழியா முத்தி வீடுமன்றோ
பண்ணளிக்கும் சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே.

பொழிப்புரை:- பண்ணினிமைதரும் சொற்களையும், பரிமளத்தையும் நல்கும் அபிராமிதேவியே, நின்னருளைப் பெற முற்பிறப்புக்களில் கோடி தவங்களைச் செய்த மெய்யடியார்கள் தாம் இம்மையில் பொருட்செல்வம் ஒன்றை மாத்திரமா பெறுவர்? (எல்லாப் பேறுகளும் பெறுவார் என்பதாம்.) 15

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்து ஒளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கு இடமே எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதற் பூதங்களாகி விரிந்த அம்மே
அளியேன் அறிவு அளவிற்கு அளவானது அதிசயமே.

பொழிப்புரை:- அபிராமியே! நின் மெய்யடியார்களிடத்து நுண்மையாய் விளங்கிப் பருமையாய்ப் புலப்படும் தூய அறிவாய் விளங்குபவரே! அவ்வறிவில் மெய்யொளி விளக்கமாய் மிளிரும் சிவபரம்பொருளுக்கு ஆதாரமாய் இருப்பவரே! சிந்திப்பின் பரவெளியாய் விளங்குபவரே! பரவெளியாயினும் ஆகாயம் முதலாம் பூதங்களாயும் விரிந்திருப்பவரே! பொய்யடியேனின் சிற்றறிவளவுக்கு உன்னருள் அளவாயது ஆச்சரியமே. 16

அதிசயமான வடிவுடையாள் அரவிந்தம் எல்லாம்
துதிசய ஆனன சுந்தரவல்லி துணை இரதி
பதிசயமானது அபசயமாக முன் பார்த்தவர்தம்
மதிசயமாக அன்றோ வாமபாகத்தை வவ்வியதே.

**பொழிப்புரை:–** அற்புதத் திருமேனியும் அம்புயம் வணங்கும் திருமுகமும் உடைய அபிராமிதேவி தன்னேரில்லா ரதியின் கணவன் மன்மதனை நெற்றிக் கண்ணால் அழித்த சிவபெருமானின் மதியை வெல்வதற்காக அன்றோ இடதுபாகத்தைக் கவர்ந்து கொண்டது. 17

வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்து என்னை ஆண்ட பொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன் என்மேல் வரும்போது வெளிநிற்கவே.

**பொழிப்புரை:–** சிவபெருமானும் அவரது இடதுபாகத்தைக் கவர்ந்து பெற்ற நீரும் உங்கள் திருமணக்கோல அழகும் அடியேனின் செருக் கறுத்தருளிய பொற் திருவடிகளுமாய் எழுந்தருளி வந்து கொடிய யமன் என்னை எதிரும் மரண காலத்தில் முன்நின்று காட்சிதந்து அருளுவீராக! 18

வெளிநின்ற நின்திருமேனியைப் பார்த்து என்விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்டதில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது என்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.

**பொழிப்புரை:–** ஒளிநின்ற நவகோணங்களில் எழுந்தருளியிருக்கின்ற அபிராமிதேவியே! தியானத்தில் வெளிப்படும் நின் உருவ தரிசனம் பெற்றமையால் தமியேனது கண்ணிலும் கருத்திலும் களிகூர்ந்து நிலை பெறுகின்ற ஆநந்த வெள்ளத்திற்கோ கரை காணப்படவில்லை. ஆயினும் என் உள்ளத்தினுள்ளே ஞானத் தெளிவு மேலோங்கி நிற்பது என்ன திருவுள்ளமோ அறியேன். 19

உறைகின்ற நின் திருக்கோயில் நின்கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறையின் அடியோ முடியோ அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ கஞ்சமோ எந்தன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதியோ பூரணாசல மங்கலையே.



**பொழிப்புரை :-** நித்திய பூரண தேவியே, தேவரீரின் திருக்கோயில் உன் கணவரின் ஒரு பாகமோ, நான்கு வேதங்களின் முதலும் முடிவுமோ, அமுத சந்திரமண்டலமோ, வெண்தாமரை மலரோ, இந்திரச் செல்வம் மறைந்த பாற்கடலோ, என் நெஞ்சகமோ அறியேன். 20

மங்கலை செங்கலசம் முலையாள் மலையாள் வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவு கங்கை
பொங்கலை தங்கும் புரிசடையோன் புடையாள் உடையாள்
பிங்கலை நீலி செய்யாள் வெளியாள் பசும் பெண்கொடியே.

**பொழிப்புரை :** நித்திய சுமங்கலையும் செம்மாணிக்கக் கலசம்போன்ற திரு முலையையுடையவரும், பார்ப்பதியும், வெண்சங்கு வளை அணிந்த கைகளை உடைய சகல கலைகளுக்கும் அதிதெய்வமாகிய விசேட மயில் போன்ற வரும், அலை வீசும் கங்கா நதியைச் சடையில் தாங்குபவராகிய சிவ பெருமானது இடப்பாகத்தில் இருப்பவரும், என்னை அடிமையாக உடை யவளும் ஆகிய அபிராமிதேவி பொன், நீலம், செம்மை, வெண்மை முதலிய நிறங்களை உடைய பெண்கொடியாவார். 21

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்கு வம்பே பழுத்த
படியே மறையின் பரிமளமே பனிமால் இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே
அடியேன் இறந்துஇங்கு இனிப் பிறவாமல்வந்து ஆண்டுகொள்ளே.

**பொழிப்புரை :** வஞ்சிக்கொடியும் பொற்கொம்பும் போன்றவரே! பக்குவமில்லாத எனக்கு அகாலத்தில் பழுத்த அருட்கனியே! வேத வாசனையே! சிவக்களிறு தழுவும் இமயப்பிடியே! பிரமாதி தேவர்களைப் பெற்ற அபிராமி தேவியே! அடியேன் இங்கு இறந்து இனிப் பிறவாவண்ணம் காத்தருள்வாயாக. 22

கொள்ளேன் மனத்தில் நின்கோலம் அல்லாது அன்பர்கூட்டம் தன்னை
விள்ளேன் பரசமயம் விரும்பேன் வியன் மூவுலகுக்கு
உள்ளே அனைத்தினுக்கும் புறம்பே உள்ளத்தே விளைந்த
கள்ளே களிக்கும் களியே அளியஎன் கண்மணியே.

**பொழிப்புரை :-** மூவுலகின் உள்ளும் புறமும் என் மனத்திலும் இறுகி விளைந்த ஆனந்தமே! மெய்யடியார் மிகமகிழும் பேரன்பே! எளியேனின் கண்ணின் மணியான அபிராமிதேவியே! என் உளத்தில் தேவிரீரையன்றிப் பிறிதொருவரை உட்கொள்ளேன். நின்னடியார் குழுவை விட்டுப் பிரியேன், புறச்சமயங்களையும் விரும்பேன். 23

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணி புனைந்த
அணியே அணியும் அணிக்கு அழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்தபின்னே.

**பொழிப்புரை :-** *மாணிக்க மணியே! அம்மணியொளியே! மாணிக்க ஆபரணம் போன்றவரே! அவ்வாபரணங்களின் அழகாயிருப்பவரே! புகலடையாதவர்க்குப் பிணி போன்றவரே! புகலடைந்தார்க்கு நன்மருந்து போன்றவரே! தேவர்களுக்கு நல்விருந்தாகிய அபிராமிதேவியே! இச்சிறப்பு வாய்ந்த நின் திருவடிகளைப் பணிந்தபின் வேறு எவரையும் வணங்கமாட்டேன்.* 24

பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண்டேன் முதல்மூவருக்கும்
அன்னே உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனி உன்னை யான்மறவாமல் நின்று ஏத்துவனே.

**பொழிப்புரை :-** *மும்மூர்த்திகளுக்கு மாதாவே! அபிராமிதேவியென்று மூவுலகிலும் பேர் படைத்த தேவாமிர்தமே! உம் மெய்யடியாரின் பின்நின்று பிறப்புவலையைச் சிவபுண்ணிய வாளால் அறுக்க முயன்றுகொண்டேன். இதனால் அடியேன் நின் நினைவொழியாது தோத்திரம் செய்வேன். இனி எனக்கென்ன குறையுண்டு?* 25

ஏத்தும் அடியவர் ஈரேழு உலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம் கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல்அணங்கே மணம்நாறும் நின் தாளிணைக்கு என்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே.

**பொழிப்புரை :-** *கடப்ப மலர் சூடும் அபிராமிதேவியே! நின் திருவடியைத் துதிக்கும் அடியவர்கள் எல்லாவுலகையும் ஆக்கி அளித்து அழிக்கும் மும்மூர்த்திகளாவர். இருந்தும் தேவரீரின் திருவடிகளுக்குச் சாத்துவதற்கு நாயிற்கடையேனுன என் நாவினின்றும் தோன்றிய இப்பாமாலை நின் திருச்செவிகளுக்கு ஏறிய பிரகாரம் சிரிப்புக்கிடமாயிற்று.* 26

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத்து அழுக்கை எல்லாம் நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின் அருள் ஏதென்று சொல்லுவதே.



**பொழிப்புரை:-** *அபிராமிதேவியே! நின் திருவடி மலர் இரண்டையும் என் சிரசில் சூடும் திருத்தொண்டை எனக்கே வரையறுத்தருளினை. அதனால் என் மனமாசுகளை நின் கிருபை வெள்ளத்தால் முற்றற நீக்கினை. அதனால் நெக்குருகும் மனத்து அன்பினையுண்டாக்கினை. பிறவி வரும் வழியையும் அடைத்தனை. சிறுதொழில், சிறுமதி உடையேன் இப்பேரருளை யாதென்று சொல்லிப் புகழ்வேன்?* 27

சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே.

**பொழிப்புரை:-** *ஐந்தொழில் நடனம் புரியும் சிவபிரானோடு சொல்லும் பொருளும்போலத் தழுவிநிற்கும் அபிராமிதேவியே! நின் சிவந்த திருவடியை வழிபடும் மெய்யடியார்களுக்கு அரசும் தவவொழுக்கமும் சிவலோகப் பதப்பேறும் என்னும் மூன்றும் ஒருதலையாகக் கிடைக்கும்.* 28

சித்தியும் சித்திதரும் தெய்வமாகித் திகழும் பரா
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்து எழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தை அன்றே.

**பொழிப்புரை:-** *அட்டமாசித்தியும் சித்தி தரும் பராசக்தியும் இச்சத்தி தழைக்கும் பரசிவமும் தவம் செய்வார் அடையும் பரமுத்தியும் பரமுத்தி விளையும் சிவஞானமும் ஆன்ம போதத்துள்ளே நிறைந்து நின்று நம்மைக் காக்கும் திரிபுரசுந்தரி ஆகிய அபிராமிதேவியாகும்.* 29

அன்றே தடுத்து என்னை ஆண்டுகொண்டாய் கொண்டதல்ல என்கை
நன்றே உனக்கு இனி நான் என்செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரை ஏற்றுகை நின் திருவுளமே
ஒன்றே பல உருவே அருவே என் உமையவளே.

**பொழிப்புரை:-** *ஓருருவே! பல உருவே! அரூபியே! அடியேன் வணங்கும் உருவத்தை உடைய அபிராமிதேவியே! அடியேனை அன்றே தடுத்தாட்கொண்டருளினீர்! இனி, இதனை அல்லவென்று மறுத்தல் கருணைக் கடலாகிய தங்களுக்கு நல்லதாகுமா? ஆகாதென்றே நான் கடலில் போய் வீழினும் கருணைக் கையால் தூக்கி முத்திக் கரையிலேற்றல் தேவரீரின் திருவுளப் பாங்கேயாம்.* 30

உமையும் உமை ஒருபாகரும் ஏக உருவில் வந்திங்கு
எமையும் தமக்கு அன்பு செய்யவைத்தார் இனி எண்ணுதற்குச்
சமயங்களும் இல்லை ஈன்றெடுப்பாள் ஒரு தாயுமில்லை
அமையும் அமையுறு தோழியர்மேல் வைத்த ஆசையுமே.

**பொழிப்புரை:-** (அடியேனின் கனவு நிலையில்) உமையும் உமைபாகருமாகிய நீவிர் இருவீரும் மாதொருபாகராய் எழுந்தருளிவந்து என்னையும் ஒரு பொருளாக்கி உம்மை அன்புசெய்ய வைத்தருளினீர். இதனை ஆராய இனி வேறு மெய்ச்சமயங்களும் இல்லை. என்னைப் பெறவோர் தாயுமில்லை. மென்மையான தோள்களையுடைய மாதர்மேல் கொண்ட பெருமோகமும் இனி எமக்குப் போதும். 31

ஆசைக் கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற்பட இருந்தேனை நின் பாதமென்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டுகொண்ட
நேசத்தை என் சொல்லுவேன் ஈசர் பாகத்து நேரிழையே.

**பொழிப்புரை:-** இறைவனின் வாமபாகத்து அபிராமிதேவியே! விருப்பு வெறுப்பில் சிக்குண்டு இயமபாசத்தில் கட்டுண்டு மரணம், நரகம் என்னும் துன்பங்களை அனுபவிக்கவிருந்த தமியேனைத் தேவரீர்! நுமது திருவடி மலரை என் புன்தலையிற் சூட்டித் தடுத்தாண்ட தலையன்பை என்னென்று சொல்லித் துதிப்பேன்? 32

இழைக்கும் வினைவழியே அடுங்காலன் எனை நடுங்க
அழைக்கும் பொழுதுவந்து அஞ்சல் என்பாய் அத்தர் சித்தமெல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே.

**பொழிப்புரை:-** பரமபிதாவின் திருவுளம் முழுதையும் கனியச் செய்யும் யாமளையாகிய அபிராமிதேவியே! தமியேன் பூர்வ சன்மங்களிலே செய்து கொண்ட இருவினைகளின் வன்மையே என்னைக் கொல்லும் யமன் யான் நடுங்குமாறு வந்து அழைக்குஞ் சமயத்தில் தமியேன் வருந்தும் போது, தேவரீரைக் குறித்து மாதாவே உமக்கடைக்கலமென்று கூவுவேன், தேவரீர் அத்தருணம் விரைவில் எழுந்தருளி வந்து அஞ்சற்க என்று அபயமளித்தருளும். 33

வந்தே சரணம் புகும் அடியாருக்கு வானுலகம்
தந்தே பரிவொடு தான் போயிருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும் பொற்
செந்தேன் மலரும் அலர் கதிர் ஞாயிறும் திங்களுமே.



**பொழிப்புரை:-** திருக்கடவூரில் எழுந்தருளியிருக்கும் அபிராமிதேவி தன் மெய்யடியாருக்கு எழுந்தருளி, அவர் விரும்பிய வானுலகம் வழங்கி, பிரமாவின் நாவிலும், விஷ்ணுவின் திருமார்பிலும், சிவனது இடப்பாகத்திலும், இந்திரலோகத்துப் பொற்றாமரையிலும், சூரிய சந்திர மண்டலங்களிலும் தாம் சென்று வீற்றிருந்தருளுவர். 34

திங்கட் பகவின் மணம்நாறும் சீறடி சென்னி வைக்க
எங்கட்கு ஒரு தவம் எய்தியவா எண்ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ தரங்கக் கடலுள்
வெங்கட் பணி அணைமேல் துயில்கூரும் விழுப்பொருளே.

**பொழிப்புரை:-** திருப்பாற்கடலில் பள்ளிகொள்ளும் மகாவிஷ்ணுவை நிலைக்களமாய்க்கொண்டு யோகத் துயில் கொள்ளும் அபிராமிதேவியே! ஒரு கலையாகிய சந்திரமணம் கமழும் நினது சிறிய திருவடிகளைத் தலையிற் சூடி வணங்க மானிட வர்க்கத்துக்குட்பட்ட எங்கட்கும் ஓர் அரிய தவம் இருந்தவாறு நன்று! நன்று!! தேவர்கட்காயினும் இவ்வருந்தவப்பயன் கிட்டுமோ? 35

பொருளே பொருள் முடிக்கும் போகமே அரும்போகம் செய்யும்
மருளே மருளில் வரும் தெருளே என்மனத்து வஞ்சத்து
இருளேதும் இன்றி ஒளி வெளியாகி இருக்கும் உன்தன்
அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே.

**பொழிப்புரை:-** பொருளாகவும் பொருளால் அனுபவிக்கப்படும் போகமாகவும் போக மயக்கமாகவும் அம்மயக்கத்தைத் தீர்க்கும் விளக்கமாகவும் மலராசனத்தைப் பீடமாகவும் கொண்ட தேவியே, உனது பேரருளின் மெய்ம்மையை அடியேனுக்கு அறிவித்தருள்வீராக! 36

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்துமாலை விட அரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடையான் இடம் சேர்பவளே.

**பொழிப்புரை:-** இறைவனது வாமபாகத்தைப் பொருந்தியவளே, நின் கைகளில் கரும்புவில்லும் புஷ்பபாணங்களும் திருமார்பிலே முத்துவடங்களும் திருவரையிலே இரத்தினம் பதித்த மேகலையும் பட்டும் அணிந்திருப்பது பெரிதும் வியப்பையே உண்டாக்குகிறது. 37



85741

**பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும் பனிமுறுவல்**
**தவளத் திருநகையும் துணையா எங்கள் சங்கரனைத்**
**துவளப் பொருது துடிஇடை சாய்க்கும் துணைமுலையாள்**
**அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே.**

**பொழிப்புரை:-** *எம்மவர்களே! அமரபோகத்தை அனுபவிக்கவேண்டுமானால் செய்ய திருவாயும் முல்லைப் புன்முறுவலும் கொண்டவளும் சங்கரனார் யோகத்தைக் குலைத்து இடப்பாக் நாயகியாக விளங்குகின்றவளுமாகிய அபிராமிதேவியை எந்நாளும் வழிபடுங்கள்.* 38

**ஆளுகைக்கு உந்தன் அடித்தாமரைகள் உண்டு அந்தகன்பால்**
**மீளுகைக்கு உந்தன் விழியின் கடையுண்டு மேல் இவற்றின்**
**மூளுகைக்கு என்குறை நின்குறையேஅன்று முப்புரங்கள்**
**மாளுகைக்கு அம்பு தொடுத்த வில்லான் பங்கில் வாள்நுதலே.**

**பொழிப்புரை:-** *திரிபுரங்களைத் தகனம் செய்த சிவபெருமானது இடப்பாகங் கொண்டு ஒளி பொருந்திய நெற்றியோடு விளங்குபவளே! என்னை அடிமை கொள்வதற்கு உன்றன் திருவடிகளும், மரண காலத்தில் இயமனிடம் இருந்து மீட்பதற்கு உன்றன் திருவிழியும் அமைந்திருப்பதால் இதன் பயனை அடையாது விடுவேனானால் அது தமியேனது குறையேயாகும்.* 39

**வாள்நுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்**
**பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியைப் பேதைநெஞ்சில்**
**காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும்அன்பு**
**பூணுதற்கு எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே.**

**பொழிப்புரை:-** *ஒளி பொருந்திய நெற்றிக்கண்ணையுடையவளும் தேவர்களும் பூசித்துப் பயன்பெற்றுய்கின்ற எம்பெருமாட்டியுமாக விளங்குகின்ற தேவியைப் பாசஞான பசுஞானங்களால் அடைய முடியாத கன்னிகையை அடியேன் கண்டு தரிசிக்கும் பாக்கியமான எண்ணத்தைப் பெற்றேன் என்றால் அது பூர்வபுண்ணியப் பயனன்றி வேறொன்றுமில்லை.* 40

**புண்ணியம் செய்தனமே மனமே புதுப் பூங்குவளைக்**
**கண்ணியம் செய்ய கணவரும் கூடி நம் காரணத்தால்**
**நண்ணி இங்கே வந்து தம்அடியார்கள் நடுவிருக்கப்**
**பண்ணி நம் சென்னியின்மேல் பத்ம பாதம் பதித்திடவே.**



**பொழிப்புரை:-** *நில விழியாள் அபிராமிதேவியும் சிவந்த திருமேனியையுடைய சிவபெருமானும் ஒன்றுசேர்ந்து என் காரணமாக மாதொரு பாகராய் என்னுள் வந்து என்னைத் தன் மெய்யடியார்கள் மத்தியிலே இருக்கப் பண்ணி என் தலைமேல் தமது திருப்பாதங்களைச் சூடுவதற்கு மனமே! நீயும் நானும் எத்தனை கோடி புண்ணியங்களைச் செய்திருக்கிறோம்.* 41

**இடம்கொண்டு விம்மி இணைகொண்டு இறுகி இளகி முத்து**
**வடம்கொண்ட கொங்கை மலைகொண்டு இறைவர் வலியநெஞ்சை**
**நடம்கொண்ட கொள்கை நலம்கொண்ட நாயகிநல்லரவின்**
**படம்கொண்ட அல்குல் பனிமொழி வேதப் பரிபுரையே.**

**பொழிப்புரை:-** *விசாலித்துப் பூரித்து இணை ஒத்து நெருங்கியுள்ள மென்மையாகிய தனமலையையும் அல்குற் தேரையும் கொண்டு இறைவனது திருமார்பை நடனசாலையாக்கி நடமிடும் தேவி வேதங்களாகிய சிலம்பை அணிந்தவள்.* 42

**பரிபுரச் சீறடிப் பாசாங்குசை பஞ்சபாணியின் சொல்**
**திரிபுரசுந்தரி சிந்துர மேனியள் தீமை நெஞ்சில்**
**புரிபுர வஞ்சரை அஞ்சக் குனி பொருப்புச் சிலைக்கை**
**எரிபுரை மேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே.**

**பொழிப்புரை:-** *வேதச் சிலம்பணிந்த திருவடிகளையும், பாச அங்குசங்களுடன் பஞ்ச பாணங்களையும் கொண்ட திருக்கரங்களையும், இன்சொற்களைப் பேசுகின்ற திருவாயையும் உடைய திரிபுரசுந்தரியாகிய அபிராமி தேவி திரிபுரங்களையும் எரித்த சிவபெருமானது இடப்பாகத்தைத் தனதிடமாகக் கொண்டவள்.* 43

**தவளே இவள் எங்கள் சங்கரனார் மனை மங்கலமாம்**
**அவளே அவர்தமக்கு அன்னையுமாயினள் ஆகையினால்**
**இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்**
**துவளேன் இனி ஒருதெய்வம் உண்டாக மெய்த்தொண்டு செய்தே.**

**பொழிப்புரை:-** *தவச்செல்வியான அபிராமிதேவி சிவபெருமானின் மனைவியாம். அவளே ஒரு அவசரத்தில் அவர்க்குத் தாயுமாகிறாள். எல்லாக் கடவுளர்க்கும் மேலான இறைவியாகியும் விளங்குகிறாள். அதனால், இனிமேல் இவளுக்கு மேலாக முதற்தெய்வம் ஒன்று உண்டு என எண்ணித் தொண்டுகள் செய்து வருந்தேன்.* 44

தொண்டு செய்யாது நின்பாதம் தொழாது துணிந்து இச்சையே
பண்டு செய்தார் உளரோ இலரோ அப்பரிசு அடியேன்
கண்டு செய்தால் அது கைதவமோ அன்றிச் செய்தவமோ
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றே பின் வெறுக்கையன்றே.

**பொழிப்புரை:-** அபிராமிதேவியே! தேவரீருக்குத் திருத்தொண்டு செய்யாமலும் வணங்காமலும் துணிவுடன் வாழ்ந்த ஞானிகள் சிலர் உண்டோ? இல்லையோ? உண்டென்றால் அடியேனும் அதனைப் பின்பற்றி அவர்கள் போல் குறைகள் செய்திருந்தால் அவர்களைப் பொறுத்தருளியதுபோலத் தேவரீர் என்னையும் பொறுத்தருள்வீராக. 45

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம் அடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே புது நஞ்சை உண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்த பொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான்உன்னை வாழ்த்துவனே.

**பொழிப்புரை:-** உன்னுடைய அடியார்கள் வெறுக்கத்தக்க செயல்களைச் செய்தாலும் அவர்களை மன்னித்து அருளுவது தேவரீருக்குப் புதியதல்லவே. நீலகண்டரது இடப்பாகத்தை இடமாகக் கொண்ட அபிராமிதேவியே! என் வேண்டுதலை நீ மறுத்தாலுங்கூட நின்னை வாழ்த்துவதில் நான் தவற மாட்டேன். 46

வாழும்படி ஒன்று கண்டுகொண்டேன் மனத்தே ஒருவர்
வீழும்படி அன்று விள்ளும்படி அன்று வேலை நிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

**பொழிப்புரை:-** அடியேன் பேரின்பத்தில் வாழுவதற்கு உதவும் மெய்ப் பொருளைக் கண்டுகொண்டேன். அது ஒருவர் மனத்தால் நினைவதற்கோ வாயாற் சொல்லுதற்கோ உரியதல்ல. ஏழு உலகங்களுக்கும் அட்டதிக்கு மலைகளுக்கும் அப்பால் சூரிய சந்திர மண்டலங்களுக்கிடையே நின்று பிரகாசிக்கிறது அது. 47

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார் பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே.



**பொழிப்புரை:-** பிறைமதிச் சடையையுடைய சிவபெருமானாகிய பொன் மலையைப்பற்றிப் படரும் பசுங்கொடியாகிய அபிராமிதேவியை மனம் எனும் விளைநிலத்துள் பதித்துச் சிவானந்த விளைவைப் பெற்று முக்கரண துன்பத்தையும் ஒழித்துக் கணப்பொழுதேனும் தியானத்தில் இருப்பவர் நாறும் உடலை மீண்டும் எடுப்பரோ! 48

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி வெங்கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கை அமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சல் என்பாய்
நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே.

**பொழிப்புரை:-** யாழிசை நாதரூபியாகிய அபிராமிதேவியே! உடலைக் குடிலாகக் கொண்டு ஒதுங்கியிருந்த என்னுயிர் காலன் கைப்படும் மரணத் தறுவாயில் தெய்வ மகளிர் சூழ எழுந்தருளி நினது திருக்கரத்தால் அஞ்சல் என அபயமளித்துத் திருவருள் பாலிப்பீராக. 49

நாயகி நான்முகி நாராயணி கைநளின பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கி என்று
ஆய கியாதி உடையாள் சரணம் அரண் நமக்கே.

**பொழிப்புரை:-** பிரமநாயகியும் நாராயணனின் நாயகியும் மலர்க்கணைகளைத் திருக்கரத்தில் தரித்தவளும், சிவனின் சக்தியும், உருத்திராணியும், சாமளாதேவியும், சர்ப்பமாலையை அணிந்தவளும், வராகியும், சூலபாணியும், மாதங்கியுமாகிய மந்திர நாமங்களையுடைய அபிராமிதேவியைச் சரணடைதலே நமக்குப் பாதுகாப்பாம். 50

அரணம் பொருள் என்று அருள் ஒன்றிலாத அசுரர் தங்கள்
முரண் அன்று அழிய முனிந்த பெம்மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் என நின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே.

**பொழிப்புரை:-** முப்புரச் செல்வங்களையே உறுதிப்பொருள் என எண்ணி, கொலையாதி கொடுமை செய்த முப்புரத்தவர்களையும் அடக்கிய சிவபெருமானும் முகுந்தனுமே சரணம் சரணம் என்று போற்றுகின்ற நல்லவியே! உன்னை வழிபடுபவர்க்கு மரணம் பிறவி ஆகிய இரண்டும் இல்லை. 51

வையம் துரகம் மதகரி மாமகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு அன்பு முன்பு
செய்யும் தவமுடையார்க்கு உளவாகிய சின்னங்களே.

**பொழிப்புரை :-** சிவபெருமானது திருத்தேவியாகிய அபிராமிதேவியை முற்பிறப்பில் அன்பு செய்தவர்களுக்கு இப்பிறப்பில் தேர், குதிரை, யானை, பொன்மகுடம், மாணிக்க ஆபரணங்கள் ஆகிய எல்லாம் தாமே கிடைக்கும். 52

சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும் முத்தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும் கண்மூன்றும் கருத்தில் வைத்துத்
தன்னந் தனி இருப்பார்க்கு இதுபோலும் தவமில்லையே

**பொழிப்புரை :-** அபிராமிதேவியின் திருமேனியில் அமைந்துள்ள திரு அங்கங்களை மனதில் பதியவைத்து, சும்மா இருப்பவர்க்கு இதுபோன்ற தவம் வேறு ஒன்றுமில்லை. 53

இல்லாமை சொல்லி ஒருவர்தம்பால் சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

**பொழிப்புரை :-** வறுமையைச் சொல்லி இழிவுபட்டு நில்லாமல் இருக்க நினைவீரானால் தவம் கல்வி இல்லா உலோபிகளிடத்துத் தமியேன் ஒரு காலமும் செல்லாமல் தடுத்தாண்ட திரிபுரசுந்தரியாகிய அபிராமிதேவியின் திருவடிகளை நீங்கள் புகலடையுங்கள். 54

மின் ஆயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்றது
அன்னாள் அகம் மகிழ் ஆனந்தவல்லி அருமறைக்கு
முன்னாய் நடு எங்குமாய் முடிவாய முதல்விதன்னை
உன்னாது ஒழியினும் உன்னினும் வேண்டுவது ஒன்றிலையே.

**பொழிப்புரை :-** பேரொளியே ஒரு வடிவமாகிப் பிரகாசிப்பவரும், சிவனும் அடியவர்களும் மகிழும் பேரானந்தவல்லியும், வேதங்களின் முதல் நடு இறுதியுமாய், விளங்கும் முதல்வியாகிய அபிராமிதேவியைத் தியானிக்காதுவிட்டாலும் நாம் விரும்புவது ஒன்றும் ஆவதற்கில்லை. தியானித்தாலும் வேண்டத்தக்கது மோட்சமின்றி ஒன்றில்லை. 55

LIBRARY
JAFFNA

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கி நிற்பாள் என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா இப்பொருள் அறிவார்
அன்று ஆலிலையில் துயில்கின்ற பெம்மானும் என்ஐயனுமே.

**பொழிப்புரை:-** ஒன்றாய்ப் பலவாய் விரிந்து எல்லாவற்றிலும் வியாபித்தும் தனித்தும் நிற்பவராகிய அபிராமிதேவி என் நெஞ்சினுள் நின்று திருவருள் செய்கின்றது என்ன அதிசயம்? இதனை விஷ்ணுவும், சிவபெருமானுமே அறிய வல்லார். 56

ஐயன் அளந்தபடி இருநாழிகொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உந்தன் மெய்யருளே.

**பொழிப்புரை:-** சிவபெருமான் அளந்தபடி அறம் வளர்த்த நாயகியாகிய உன்னையும் வணங்கி, அத்துடன் செல்வர்பால் செந்தமிழ்ப் பாமாலை புனைந்து சென்று பொய்யும் மெய்யும் பேசவும் வைத்தாய். அபிராமி தேவியே! இதுதானா உனது உண்மைத் திருவருள்? 57

அருணாம் புயத்தும் என்சித்த அம்புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல் நல்லாள் தகைசேர் நயனக்
கருணாம் புயமும் வதன அம்புயமும் கா அம்புயமும்
சரணாம் புயமும் அல்லால் கண்டிலேன் ஒரு தஞ்சமுமே.

**பொழிப்புரை:-** செந்தாமரையிலும் என் இருதயத்தாமரையிலும் ஒருநிகரா எழுந்தருளும் அபிராமிதேவியினது திருவிழிகளும் திருமுகமலரும் திருக்கர மலரும், திருவடித்தாமரை மலர்களுமே அல்லாது வேறு உயிர்த்துணை அறியேன். 58

தஞ்சம் பிறிதில்லை ஈதல்லது என்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம்பு இக்கு அலராக நின்றாய் அறியாரெனினும்
பஞ்சஞ்சு மெல்அடியார் அடியார் பெற்ற பாலரையே.

**பொழிப்புரை:-** கரும்புவில்லையும் புஷ்பபாணங்களையும் திருக்கரத்தில் தாங்கிய முத்தொழில் தேவியே! நின்னைத் தஞ்சமடையும் தவநெறியேயன்றி வேறு ஆதரவு இல்லை என்பதைப் பாவியேன் அறிந்துகொண்டும் அத்தவ நெறியில் நெஞ்சமுந்த நின்று வணங்க எண்ணுகின்றிலேன். பஞ்சின் மெல்லடிப் பாவையர் பேதையர் ஆனாலும் தாம் பெற்ற பிள்ளைகளின் குற்றங்களை மன்னிப்பார்! அன்றோ? 59

பாலினும் சொல்இனியாய் பனிமாமலர்ப் பாதம் வைக்க
மாலினும் தேவர் வணங்க நின்றோன் கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு
நாலினும் சாலநன்றோ அடியேன் முடை நாய்த் தலையே.

**பொழிப்புரை:-** பாலினும் இனிய சொற்களைச் சொல்லும் தேவியே! திருமாலாதி தேவர்கள் வணங்கும் சிவபெருமானின் திருமுடிமேலிடத்தும் எட்டாததனால் அவருடைய பாதங்களின்கீழ்ப் பாதுகையாகவும் நின்று துதிக்கும் வேதங்களிலுள்ள பிரணவ பீடங்கள் நான்கிலும்பார்க்க, சிறந்த நின் திருவடிகளைச் சூடுவதற்கு என் இழிந்த தலை உசிதமாமோ? 60

நாயேனையும் இங்கு ஒருபொருளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவு தந்தாய் என்ன பேறுபெற்றேன்
தாயே மலைமகளே செங்கண்மால் திருத் தங்கைச்சியே.

**பொழிப்புரை:-** தாயே! மலைமகளே! திருமாலின் தங்கைச்சியே! நாயிற் கடையேனையும் ஒருபொருட்படுத்தி ஆண்டுகொண்டீர். மேலும் வேதாகமங்களின் பிரகாரம் பேயேனும் உம்மை அறியும் பேரறிவையும் தந்தருளினீர். ஆஹா என்ன பேறிது! 61

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்து மத
வெங்கண் கரி உரி போர்த்த செஞ்சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகநதச்
செங்கைக் கரும்பும் மலரும் எப்போதும் என் சிந்தையதே.

**பொழிப்புரை:-** மேருவில்லால் முப்புரங்களை அழித்து மதயானைத் தோலைப் போர்த்த சிவபெருமானின் திருமேனியில் பொருந்த மார்பகம் அழுத்திய அபிராமிதேவியின் திருக்கரங்களிலுள்ள கரும்புவில்லும் மலர்அம்பும் எப்பொழுதும் என் தியானத்தில் உள்ளனவாம். 62

தேறும்படி சில ஏதுவும் காட்டி முன்செல் கதிக்குக்
கூறும்பொருள் குன்றில் கொட்டும் தறி குறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்
வேறும் சமயம் உண்டென்று கொண்டாடிய வீணருக்கே.



**பொழிப்புரை:-** அறுசமயத் தலைவியான பராசக்தியே அபிராமிதேவி என்பதை அறிந்தும் மறுசமயங்களை மதிக்கும் அறிவில்லாதவர்களுக்கு உண்மை எடுத்துக்காட்டுக்களைக் காட்டி அவர் நல்ல கதிபெறப் போதிக்கும் சைவத்தின் உண்மைப்பொருளானது மலைமீது அடிக்கும் குறுந்தடிபோல அவர்பால் ஏறுதுபோம். 63

வீணே பலிகவர் தெய்வங்கள்பால் சென்று மிக்க அன்பு
பூணேன் உனக்கு அன்பு பூண்டுகொண்டேன் நின் புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழுதும் திருமேனிப் பிரகாசமன்றிக்
காணேன் இருநிலமும் திசை நான்கும் ககனமுமே.

**பொழிப்புரை;-** அபிராமிதேவியே! தேவரீர்மீது நான் பேரன்பு கொண்டதனால் சிறுதேவதைகளிடம் சென்று அன்பு மேற்கொள்ளேன். தேவரீரின் புகழையன்றி வேறொருவரின் புகழை மதியேன். பூமி, நான்கு திசை, ஆகாயம் என்பவற்றில் தேவரீரின் திருமேனி ஒளியைக் காண்பதன்றி வேறு எதனையும் காணமாட்டேன். 64

ககனமும் வானும் புவனமும் காண விற்காமன் அங்கத்
தகனம் முன்செய்த தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்
முகனும் முந்நான்கு இருமூன்று எனத் தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயதன்றோ வல்லி நீ செய்த வல்லபமே.

**பொழிப்புரை:-** அபிராமிதேவியே! அண்டம், சுவர்க்கம், பூமி என்பனவற்றில் உள்ளவர்கள் காண மன்மதனை எரித்த தென்முகக் கடவுளிடமிருந்து முருகப்பெருமான் திருஅவதாரம் செய்யக்கூடிய ஒரு வல்லமையை நீ கொடுத்தாய் என்றால் உன்னால் முடியாதது ஒன்றுமில்லை என்பதாம். 65

வல்லபம் ஒன்றறியேன் சிறியேன் நின்மலரடிச் செம்
பல்லவம் அல்லது பற்று ஒன்றிலேன் பசும்பொற் பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய் வினையேன் தொடுத்த
சொல் அவமாயினும் நின் திருநாமங்கள் தோத்திரமே.

**பொழிப்புரை:-** மேருவை வில்லாகத் தரித்த சிவபெருமானோடு வீற்றிருப்பவரே! கல்வி நலம் சிறிதுமில்லாத சிறியேன் தேவரீரின் திருவடித் தளிர்களையன்றி வேறொரு பற்றுக்கோடில்லேன். என் சிறுசொல் வீணாயினும் இவ்வியல்பினேன் நின் திருவடிக்குச் சாத்தும் இவ்வந்தாதிமாலை சுவையற்றுப் பொருளுமற்றதெனினும் இம்மாலையிலுள்ள நின் நாமங்கள் தோத்திரங்களேயாம். 66

தோத்திரம் செய்து தொழுது மின்போலும் நின்தோற்றம் ஒரு
மாத்திரைப் போது மனத்தில் வையாதவர் வண்மை குலம்
கோத்திரம் கல்வி குணம் குன்றிநாளும் குடிகள் தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்கு உழலாநிற்பர் பார் எங்குமே.

**பொழிப்புரை:-** *அபிராமிதேவியே! நின் ஒளித்திருமேனியை மனதில் ஒரு நொடிப்பொழுதும் வையாதவர்கள் கொடை, குலம், கோத்திரம், கல்வி, குணம் என்பன இழந்து குடில்தோறும் சென்று பாத்திரம் ஏந்திப் பிச்சை எடுத்துப் பாரெங்கும் திரிவர்.* 67

பாரும் புனலும் கனலும் வெங்காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவை ஒளி ஊறு ஒலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாமசுந்தரி சீறடிக்கே
சாரும் தவமுடையார் படையாத தனம் இல்லையே.

**பொழிப்புரை:-** *சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து தன் மாத்திரைகளிலும், ஐந்து பூதங்களிலும், பூதப்பொருள்களிலும் கலந்து நிற்கும் உலகமாதாவாகிய சிவகாமசுந்தரியின் திருவடிகளை அடைக்கலம் புகும் மெய்யடியார்களுக்குக் கிடைக்காத செல்வம் எதுவும் இல்லை.* 68

தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வவடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

**பொழிப்புரை:-** *அபிராமிதேவியின் திருக்கடைக்கண் பார்வை ஒன்றே செல்வம், கல்வி, தளர்விலாமனம், தெய்வவடிவு, நல்லசுற்றம், அன்றியும் மேலும் நல்லன ஆகிய எல்லாவற்றையும் மெய்யடியார்களுக்கு நல்கும்.* 69

கண் களிக்கும்படி கண்டுகொண்டேன் கடம்ப அடவியில்
பண் களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண் களிக்கும் பச்சை வண்ணமுமாகி மதங்கர் குலப்
பெண்களில் தோன்றிய எம் பெருமாட்டிதன் பேரழகே.

**பொழிப்புரை:-** *வீணை தாங்கிய திருக்கரமும், திருத்தனமும், பசுமை நிறமும் ஆகிப் பாணர் குலப் பெண்களைப்போல வெளிவந்தருளிய மீனாக்ஷி அம்மையினது பேரழகினைக் கடம்பவனத்தில் கண்டு களித்தேன்.* 70



அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்தாள் பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்ற நெஞ்சே இரங்கேல் உனக்கு என்குறையே.

**பொழிப்புரை:-** *ஒப்பற்ற பேரழகையுடைய அபிராமவல்லி வேதம் துதிக்கச் சிவந்த திருப்பாதங்களையுடையவள். இளமதிச்சடையும் இளமைநலமும், பச்சை வர்ணமும் கொண்டு பொற்கொடிபோல் வருபவராகிய அபிராமி தேவி உனக்குத் துணையாய் இருக்க மனமே! உனக்கு என்ன குறை? நீ கவலையை ஒழிப்பாயாக.* 71

என்குறைதீர நின்று ஏத்துகின்றேன் இனி யான் பிறக்கின்
நின்குறையே அன்றி யார்குறை காண் இரு நீள் விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறைதீர எம்கோன் சடைமேல் வைத்த தாமரையே.

**பொழிப்புரை:-** *மின்னலின் குறையைக் காட்டும் மெலிந்த இடையும் மெல்லியல்புமுடைய அபிராமிதேவியே! அமுதகடேசுரர் தன் குறை தீரத் தன் திருச்சடையில் சூடிக்கொண்ட தாமரையே! என் குற்றம்தீர நின் திருமுன்னிலையில் உன்னைத் தரிசித்து வணங்குகிறேன். இனி எனக்குப் பரமுத்தி தந்தருளாதிருப்பது நின் குறையேயன்றி வேறில்லை.* 72

தாமம் கடம்பு படை பஞ்சபாணம் தநுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது எமக்கென்று வைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்கு ஒளி செம்மை அம்மை
நாமம் திரிபுரை ஒன்றோடு இரண்டு நயனங்களே.

**பொழிப்புரை :-** *முக்கண்ணும், நான்கு திருக்கரங்களும், செந்நிறமும், கடப்பமாலையும், பஞ்ச பாணங்களும் உடையவள் அபிராமிதேவி. இத்தேவியை வைரவர் வழிபடும் காலம் அர்த்தயாமம் ஆகும். இவர் தம் திருவடியை நமக்குச் சேமநிதியாகத் தந்திருக்கிறார்.* 73

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராமவல்லி அடி இணையைப்
பயனென்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும் பொற்
சயனம் பொருந்து தபனியக் காவினில் தங்குவரே.

**பொழிப்புரை :-** சிவன், திருமால், பிரமன், வேதங்கள் துதிக்கின்ற தேவரீரின் திருவடிகள் மறுபிறப்பில் இன்பத்தைத் தரும் என்று எண்ணுகின்ற அடியவர்கள் கற்பகதருவின்கீழ் பொற்சயனத்தில் தேவமாதர் ஆடிப்பாட மறுமையில் இந்திராதி தேவராய் வாழ்வார். 74

தங்கு உவர் கற்பகத் தாருவின் நீழலில் தாயர் இன்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்கு உவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்த உந்திக்
கொங்கு இவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே.

**பொழிப்புரை:-** கற்பகதருவின் நிழலில் வீற்றிருந்து இன்புறும் தேவர்களுள்ளே மலைகளையும், கடல்களையும், பதினான்கு உலகங்களையும் பெற்ற திரு உதரத்தையும் நறுமணம் வீசும் கூந்தலையுமுடைய அபிராமிதேவியை மோட்சம் கருதித் தியானிப்பவர்கள் கருவழி அறுத்துத் தேவியின் திருவடிகளை அடைவர். 75

குறித்தேன் மனத்தில் நின்கோலமெல்லாம் நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டு கிண்டி
வெறித்தேன் அவிழ் கொன்றை வேணிப் பிரான் ஒருகூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகுதும் பஞ்சபாண பயிரவியே.

**பொழிப்புரை:-** தேன் ஒழுகும் கொன்றை மாலையைச் சூடிய சிவபெருமானுடைய இடப்பாகத்தைக் கவர்ந்து குடிபுகுந்த வயிரவிதேவியே! நின் திருக்கோலம் முழுவதையும் உள்ளத்தில் அமைத்து வழிபட்டேன். அதனால் தேவரீரின் உடம்பாட்டுத் திருவுளத்தை அறிந்து என் மரண வழியையும் நேர்நின்று தடுத்துவிட்டேன். 76

பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணி வஞ்சர்
உயிர்அவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும் கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகி என்றே
செயிர்அவி நான்மறைசேர் திருநாமங்கள் செப்புவரே.

**பொழிப்புரை:-** பைரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்சபாணி, சண்டி, காளி, கலாவயிரவி, மண்டலி, மாலினி, சூலி, வராகி என்றே வேதங்கள் சொல்லும் தியான மந்திரங்களை மெய்யன்பர்கள் உச்சரித்துத் துதிப்பர். 77

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராமவல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத்தேன் என் துணைவிழிக்கே.



**பொழிப்புரை:-** திரண்ட அழகிய மார்பகத்தில் பரிமளக் கலவை அப்பிய அபிராமிதேவிக்குத் தெய்வத் தோழியர் அணிவித்து அழகுபடுத்திய கொப்புவாளி, வயிரத்தோடு என்ற ஆபரணங்களையும், கண்களின் திருக்கடையையும், திருவாயையும், புன்னகையையும் என் இரு விழிகளிலும் அழுத்தித் தியானத்தில் வைத்துக்கொண்டேன். 78

விழிக்கே அருளுண்டு அபிராமவல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்று வெம் பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம்மோடு என்ன கூட்டு இனியே.

**பொழிப்புரை:-** அபிராமிதேவியின் திருவிழிகளில் திருவருள் இருக்கிறது. வேதவழியில் வழிபட எமக்கு மனம் இருக்கின்றது. அங்ஙனமாகப் பழி பாவங்களில் மனம் சுழன்று அவற்றையே விடாது செய்து நரகத்தில் விழுந்து அழுந்துகின்ற கீழ்மக்களோடு எமக்கு இனி என்ன கூட்டுறவு? 79

கூட்டியவா என்னைத் தன் அடியாரில் கொடியவினை
ஓட்டியவா என்கண் ஓடியவா தன்னை உள்ளவண்ணம்
காட்டியவா கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டியவா நடம் ஆடகத் தாமரை ஆரணங்கே.

**பொழிப்புரை:-** தாமரை மலரில் வீற்றிருக்கின்ற அபிராமிதேவி அடியேனைத் தன்னடியாருடன் சேர்த்ததும், எனது இருவினைகளை நீக்கியதும், என்னை ஆட்கொண்டதும், தன் உண்மை வடிவைக் காட்டியதும், கண்ட கண்களும் தியானித்த மனமும் மகிழவைத்ததும், ஆனந்த நாடகமாட வைத்ததும் மிகவும் வியக்கத்தக்கது. 80

அணங்கே அணங்குகள் நின் பரிவாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன் நெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கேன் எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவு ஒன்றிலேன் என்கண் நீவைத்த பேரளியே.

**பொழிப்புரை:-** அபிராமிதேவியே! நின் பரிவாரங்களுமே தெய்வங்களாயிருக்கையில் நானும் உன்னையேயன்றி மற்றொருவரை வாழ்த்தவோ வணங்கவோ மாட்டேன். வஞ்சகரோடு ஒருபோதும் இணங்கேன். தேவரீரை 'என் பொருள் யாவும் உன் பொருள்' என்ற அர்ப்பண புத்தியுள்ள பக்தரோடு பிணங்கமாட்டேன். அறிவிலேனெனினும் என்னிடம் நீவைத்த தண்ணளி எம்மாத்திரம்! 81

அளிஆர் கமலத்தில் ஆரணங்கே அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திருமேனியை உள்ளும்தொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய்விடின் எங்ஙனே மறப்பேன் நின்விரகினையே.

பொழிப்புரை:– கமலத்திருவே! எல்லா உலகமும் தேவரீரின் ஒளிக்குள் அடங்கி நிலைபெறுவதாக. நின் ஒளித்திருமேனியைத் தியானிக்குந்தோறும் என் அந்தக்கரணங்கள் ஆனந்தவெள்ளத்தில் அழுந்தி ஞானவெளி திறந்து விடுகிறதெனில் தேவரீரின் திருவருள் ஆற்றலை நான் எவ்வாறு மறந்து வாழ்வேன்? 82

விரவும் புதுமலர்இட்டு நின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல்லார் இமையோர் எவரும்
பரவும் பதமும் அயிராவதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே.

பொழிப்புரை:– அபிராமிதேவியே! தேவரீரின் திருவடிகளுக்குப் புதுமலர்களால் அர்ச்சனைசெய்து வணங்கும் அடியவர்கள் தேவர்பதத்தையும், அயிராவதத்தையும், பகீரதியையும், வச்சிராயுதத்தையும், கற்பகச்சோலையையும் உடைய இந்திரர் ஆவர். 83

உடையாளை ஒல்கு செம்பட்டு உடையாளை ஒளிமதிச் செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சு அடையாளைத் தயங்கு நுண்ணூல்
இடையாளை எங்கள் பெம்மானிடையாளை இங்கு என்னை இனிப்
படையாளை உங்களையும் படையாவண்ணம் பார்த்திருமே.

பொழிப்புரை:– என்னைப் பழைய அடியானாக உடையவரும், செம்பட்டுடையை உடையவரும், ஞானமதியைச் சூடியவரும், வஞ்சமுடையவர் நெஞ்சை அடையாதவரும், சிற்றிடையை உடையவரும், சிவபெருமானின் இடப்பாகத்தை உடையவரும், இனி என்னைப் படையாதவரும் ஆகிய அபிராமிதேவியின் அடியார்களே! அவள் உங்களையும் இனிப் படையாத வண்ணம் தியானியுங்கள். 84

பார்க்கும் திசைதொறும் பாசஅங்குசமும் பனிச் சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும் என் அல்லலெல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும் சிற்றிடையும்
வார்க் குங்கும முலையும் முலைமேல் முத்துமாலையுமே.



பொழிப்புரை:- பார்க்கும் இடமெல்லாம் என் துன்பம் நீக்கும் திரிபுரசுந்தரியினது திருமேனியும், சிற்றிடையும், குங்குமக்கோலத் திருமார்பகமும் அதன்மேல் முத்துமாலையும், பாசாங்குசமும், கரும்புவில்லும், குளிர்ச்சி பொருந்திய ஐந்து மலர்க்கணைகளுமே தோன்றுகின்றன. 85

மால்அயன் தேட மறைதேட வானவர்தேட நின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்த கப்பு
வேலை வெங்காலன் என்மேல் விடும்போது வெளிநில் கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே.

பொழிப்புரை:– பால், தேன், பாகு போன்ற பணிவை வருவிக்கும் மதுரமான சொற்களையுடைய அபிராமிதேவியே! கொடிய யமனானவன் தனது வேலை என்மேல் பிரயோகிக்கும்போது திருமாலும், பிரமாவும், தேவர்களும் தேட அப்பாற்பட்டு நின்ற அருமையான திருவடிகளையும், சங்கவளைத் திருக்கரங்களையும் கொண்டு என்முன் வெளிவந்து நின்றருள்வீராக. 86

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின் திருமூர்த்தி என்தன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால் விழியால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும்படி ஒருபாகம் கொண்டு ஆளும் பராபரையே.

பொழிப்புரை:– காம தகனராகிய சிவபெருமானின் யோகத்தை அழித்து இடப்பாகத்தைக்கொண்டு அன்புநிலைப்படுத்திய பராபரையே! பிரமாதி தேவர்களுக்கும் எட்டாத தேவரீருடைய திருமேனி தமியேனது ஊனக்கண்களுக்கும் சிறுபூசைக்கும் எளிதாக வெளிப்பட்டு நிற்கின்றவாறென்னே. 87

பரமென்று உனைஅடைந்தேன் தமியேனும் உன் பக்தருக்குள்
தரமன்று இவன்என்று தள்ளத்தகாது தரியலர்தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில் அயன்
சிரமொன்று செற்ற கையான் இடப்பாகம் சிறந்தவளே.

பொழிப்புரை:– முப்புரங்களும் எரியுமாறு மேருவை வில்லாக வளைத்தவரும், பிரமன் தலை கிள்ளிய திருக்கரத்தையுடையவருமான சிவபெருமானின் இடப்பாகத்து அபிராமிஅம்மையே! என் பாரம் நின் பாரம் என்று அர்ப்பணித்து நின் பாதம் சரணடைந்தேன். அவ்வாறான என்னை நின் அன்பர்கள் சேர்க்கைக்குத் தகுதியிலன் என்று தள்ளிவிட்டால் அது நின் பெருமைக்குத் தகுமல்லவே. 88

UBLIC LIBRARY.

சிறக்கும் கமலத் திருவே நின்சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும் நின் துணைவரும் நீயும் துரியமற்ற
உறக்கம் தர வந்து உடம்போடு உயிர்உறவற்று அறிவு
மறக்கும் பொழுது என்முன்னே வரல் வேண்டும் வருந்தியுமே.

**பொழிப்புரை:-** செந்திருவை (இலக்குமி) அதிட்டித்து நின்று அருளும் அபிராமிதேவியே! தேவரீரின் திருவடிகளை என் தலையில் வைத்துத் தீட்சை செய்யும் பக்குவம் வரும்பொருட்டு அன்பர் விடுபேறு அருளும் நின் நாயகனும் நீரும் எனது உடல் உயிர்த் தொடர்பு அற்று அறிவு மறக்கும் மரணத்தறுவாயில் சிவத்துயிலைத் தந்து காட்சி தந்தருள்வீராக. 89

வருந்தா வகை என் மனத் தாமரையினில் வந்து புகுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனி எனக்குப்
பொருந்தாது ஒருபொருள் இல்லை விண்மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே.

**பொழிப்புரை:-** திருக்கடவூரில் திருப்பாற்கடல் அமுதத்தைத் தேவர்களுக்குப் பகிர்ந்தளிக்க உதவியாயிருந்த பெருந்தேவி, யான் இனிப் பிறப்பிறப்புச் சுழலில் வருந்தாவண்ணம் என் இதயத்தில் எழுந்தருளிவந்து அதைத் தன் பழமனையாக்கி இருந்தாள். அதனால் இனி எனக்குக் கிடையாத பொருள் எதுவுமில்லை. 90

மெல்லிய நுண்ணிடை மின் அனையாளை விரி சடையோன்
புல்லிய மென்முலைப் பொன் அனையாளைப் புகழ்ந்து மறை
சொல்லிய வண்ணம் தொழும் அடியாரைத் தொழும் அவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம் தருமே.

**பொழிப்புரை:-** மின்னலைப்போன்ற மெல்லிய இடையையுடையவளை, சிவன் தழுவும் அழகியவாளை, வேதம் சொல்லியவண்ணம் தொழும் அடியவரின் அடியவர்க்குமே பல வாத்தியம் ஒலிக்க அயிராவதம் ஏறும் இந்திரபதவி கிடைக்கும். 91

பதத்தே உருகி நின் பாதத்திலே மனம் பற்றி உன்தன்
இதத்தே ஒழுக அடிமைகொண்டாய் இனி யான்ஒருவர்
மதத்தே மதிமயங்கேன் அவர் போனவழியும் செல்லேன்
முதற்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ் நகையே.

**பொழிப்புரை:-** முத்தேவரும் மற்றவரும் போற்றும் திருப்புன்னகை பூத்தவளே! என் மனம் கசிந்துருகி விரும்பி நின் அருள்வழி நிற்க அடித்தொண்டு அருளினீர். அதனால் இனிப் பிறசமயம் வேண்டேன்; பிறர்வழி நில்லேன். 92



நகையே இஃது இந்த ஞாலமெல்லாம் பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

**பொழிப்புரை :-** புவனம் முழுதும் பெருது பெற்ற நாயகிக்கு முகிழ்த்த மார்பகம் தாமரை அரும்பு என்பது நகைப்புக்கிடமாம். இதன்படி அவர் பிறவி எடுத்ததும் பொய்யே. அவரை நாம் பர்வததேவி என்று சொல்வதும் குற்றமே. இவரின் உண்மையைத் தெரிந்து நாம் இவரை விரும்புகிறோம் என்பதும் மிகையாகும். 93

விரும்பித் தொழும் அடியார் விழிநீர் மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்தமாகி அறிவிழந்து
சுரும்பில் களித்து மொழி தடுமாறி முன் சொன்ன எல்லாம்
தரும் பித்தராவர் என்றால் அபிராமி சமயம் நன்றே.

**பொழிப்புரை :-** விரும்பி வழிபடும் மெய்யடியார்கள் ஆனந்த விழிநீர் சொரிய, மெய் சிலிர்ப்ப ஆனந்தவெள்ளமாகியும், பசுஞானம் இழந்தும் மகிழ்ச்சி மிகுந்தும் வாய்குழறியும் நிற்கும் பித்தம் தலைக்கேறியவர் போல்வார் என்றால் அதற்குக் காரணமாகிய அவ்வபிராமிதேவியின் சமயம் ஒன்றே உலகில் மிகவும் சிறந்தது. 94

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவது
ஒன்றேயும் இல்லை உனக்கே பரம் எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனதென்று அளித்துவிட்டேன் அழியாத குணக்
குன்றே அருட்கடலே இமவான் பெற்ற கோமளமே.

**பொழிப்புரை :-** குணமலையே! அருட்கடலே! இமவான் பெற்ற இளமைச் செல்வியே! எனது உடைமை எல்லாம் அன்றே நினதென்று அளித்துவிட்டேன். இனி நன்மையோ தீமையோ எதுவரினும் அதுபற்றிச் சிந்திக்க மாட்டேன். என் பாரம் எல்லாம் உமக்கே பாரம். 95

கோமளவல்லியை அல்லி அம்தாமரைக் கோயில் வைகும்
யாமள வல்லியை ஏதமிலாளை எழுதரிய
சாமள மேனிச் சகலகலாமயில் தன்னைத் தம்மால்
ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதிபரே.

**பொழிப்புரை :-** மலர்மிசை எழுந்தருளும் இளமை நலம் வாய்ந்த வல்லிக் கொடியை, குற்றமற்றவளை, பச்சைவண்ணக் கலாமயிலை, தம்பால் இயன்றவரை தொழுகின்றவர்கள் ஏழுலகங்களுக்கும் தலைவராய் வாழ்வார்கள். 96

**ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தம் கோன்**
**போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி**
**காதிப் பொரும் படைக் கந்தன் கணபதி காமன் முதல்**
**சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.**

**பொழிப்புரை :-** சூரியன், சந்திரன், அக்கினி, குபேரன், இந்திரன், பிரமன், சிகண்டஉருத்திரர், விஷ்ணு, அகத்தியர், கந்தப்பெருமான், விநாயகர், மன்மதன் முதலாகப் புண்ணியத்தைப் பெற்றவர் அளவில்லாதோர். இவர் அபிராமியை வணங்கி வழிபடுவர். 97

**தைவந்து நின் அடித்தாமரை சூடின சங்கரர்க்குக்**
**கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்தது எங்கே**
**மெய்வந்த நெஞ்சின் அல்லால் ஒருகாலும் விரகர் தங்கள்**
**பொய்வந்த நெஞ்சிற் புக அறியா மடப் பூங்குயிலே.**

**பொழிப்புரை :-** மெய்யன்பிலன்றிப் பொய்யன்பில் தலைப்படாத அபிராமி தேவியே! தேவரீரின் அடிவருடிப் பின் சிரசில் சூடி ஊடல் தீர்ந்த சிவ பெருமானுக்கு, சூடுதற்குக் கருவியாகிய தமது இருக்கரத்தில் உள்ள அபிசார ஓமாக்கினியும், கங்காநதியும் அப்பொழுது எங்கே ஒளித்துக்கொண்டன? 98

**குயிலாய் இருக்கும் கடம்ப அடவியிடைக் கோலஇயல்**
**மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை வந்து உதித்த**
**வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீது அன்னமாம்**
**கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே.**

**பொழிப்புரை :-** இமவான் சிவபெருமானுக்குத் தத்தம் செய்த அபிராமி தேவி மதுரையில் மரகதக் குயிலாயிருந்து அருளுவர். இமயமலையில் மரகத மயிலாய் இருந்தருளுவர். வானத்தில் பொன்னிறமுள்ள பாலசூரியனாய் இருந்தருளுவர். வெண்தாமரையில் வெண்ணிற அன்னமாய் விளங்கி அருளுவர். 99

தேசிய நூலகப் பிரிவு



**குழையைத் தழுவிய கொன்றையந்தார் கமழ் கொங்கைவல்லி**
**கழையைப் பொருத திருநெடுந் தோளும் கருப்பு வில்லும்**
**விழையப் பொருதிறல் வேரி அம்பாணமும் வெண்ணகையும்**
**உழையைப் பொரு கண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே.**

**பொழிப்புரை :-** கொன்றைமாலை அணிந்த தனங்களையுடைய அபிராமி தேவியினது மூங்கிலை வென்ற திருத்தோள்களும், கரும்புவில்லும், காமம் பெருக்கும் புஷ்பபாணங்களும், வெண்புன்னகையும், மானின் நேர்விழியும், எனது மனதில் எப்பொழுதும் உதயம் செய்துகொண்டிருக்கின்றன. 100

## நூற் பயன்

**ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டமெல்லாம்**
**பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளைப் புவிஅடங்கக்**
**காத்தாளை அங்கையில் பாசாங்குசமும் கருப்புவில்லும்**
**சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே.**

**பொழிப்புரை :-** சகல அண்டங்களையும் பெறுது பெற்றவரும், அதனால் மாதாவாய் இருப்பவரும், மாதுளம்பூ நிறத்தவரும், பூமியைக் காக்கின்றவரும், தாமரைமலர், பாசாங்குசம், கரும்புவில் என்றிவற்றைத் தரித்திருப்பவருமாகிய அபிராமவல்லியைத் துதித்து வழிபடும் அடியவர்களுக்கு வரக்கூடிய தீங்கு எதுவுமேயில்லை.

1958 c.c

251

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்